செய்தி வெளியீடு எண்–693 நாள்–27.10.2007

**செய்தி வெளியீடு**

**அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்ட முன்னேற்றம் குறித்து ஒளித்தோற்ற கலந்தாய்வு – மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டார்.**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து 27.10.2007 அன்று அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்ட செயலாக்கத்தினை ஒளித்தோற்ற கலந்தாய்வு (Video Conference) மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கையின்போது பேரூராட்சிகளின் வளர்ச்சியினை ஊக்குவிக்க புதியதொரு திட்டமாக அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை அறிவித்தார். இதன் தொடர்ச்சியாக அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 3.9.2007 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மாமல்லபுரத்தில் துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்ற சீரிய திட்டமாகும். இத்திட்டத்தினால் பேரூராட்சிகள் புதுபொலிவு பெற்று அனைத்து வகையிலும் மக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயலாக்கத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 27.10.2007 அன்று தேசிய தகவலியல் மையத்தின் ஒளித்தோற்ற அரங்கத்திலிருந்து கோவை, ஈரோடு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார். தேசிய தகவலியல் மையத்தில் உள்ள ஒளித்தோற்ற கலந்தாய்வு வசதியினை பயன்படுத்தி மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும்

களப்பணிகளின் முன்னேற்றத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூர்ந்தாய்வு செய்து அறிவுரைகள் வழங்கியது அமைச்சக அளவில் இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கலந்தாய்வு கூட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.நீரஜ் மித்தல், இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஷன் சோங்காம் ஜடக் சிரு, இ.ஆ.ப. மற்றும் மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் இத்திட்டத்தினை செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்தார். தஞ்சை மாவட்டத்தின் சார்பில் திட்ட அலுவலர் திரு.இராஜாமணி மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டப் பணிகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநர் நிர்வாக அனுமதி அளித்துள்ள நிலையில் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்ட விவரம், பணிகள் துவங்கப்பட்ட விவரம் மற்றும் பிற துறை திட்டப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள், பேரூராட்சிகளில் பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பேரூராட்சிகளை தூய்மை மற்றும் பசுமைபடுத்தும் வகையிலும், குப்பை கூளங்கள் இல்லாத பேரூராட்சிகளாக மாற்ற நடத்தப்பட்ட முகாம்கள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் முன்னாடி சிறப்பு திட்டங்கள் பற்றியும் விரிவான ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் 2007–08ம் ஆண்டு 140 பேரூராட்சிகளில் ரூ.70 கோடி மதிப்பீட்டிலும், பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து ரூ.85 கோடி மதிப்பீட்டிலும் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு

வருகின்றன. இதில் ஈரோடு மாவட்டத்திலுள்ள 14 பேரூராட்சிகளில் 236 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.7.21 கோடி மதிப்பீட்டிலும் பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.15.85 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 13 பேரூராட்சிகளில் 112 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.6.27 கோடி மதிப்பீட்டிலும் பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.9.46 கோடி மதிப்பீட்டிலும், தஞ்வாவூர் மாவட்டத்திலுள்ள 6 பேரூராட்சிகளில் 46 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.3.09 கோடி மதிப்பீட்டிலும் பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.13.92 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 14 பேரூராட்சிகளில் 95 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.6.65 கோடி மதிப்பீட்டிலும் பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.12.95 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்ட செயலாக்கத்தில் சிமெண்ட் பயன்படுத்துவதில் உள்ள களப் பிரச்சினைகள் மற்றும் குளங்கள் பராமரிப்பு தொடர்பான பணிகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இதுபோன்ற ஒளித்தோற்ற கலந்தாய்வு கூட்டங்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் மாதம் இருமுறை தாம் நடத்த திட்டமிட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த கலந்தாய்வின் போது திரு.க.தீனபந்து, இ.ஆ.ப. அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப. பேரூராட்சிகளின் இயக்குநர், இணை இயக்குநர் திரு.எம்.மதிவாணன் மற்றும் இயக்கக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.